விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 227 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 18 வியாழக்கிழமை (03.08.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## இறக்குமதி தடை நீக்கம் நெருக்கடிகளை ஏற்படுத்தும்



உதய கம்மன்பில

(கொழும்பு)

தூரநோக்கமற்ற வகையில் அரசாங்கம் இறக்குமதிகள் மீதான தடைகளை நீக்கு கிறது.

இதன் விளைவு கடந்த ஆண்டை 11

## புதிய மருத்துவ சட்டமூலத்தை 6 மாதங்களுக்குள் தயாரிக்குக

### ஜனாதிபதி ரணில் பணிப்புரை



(கொழும்பு)

மக்களின் நல்வாழ்வை பாது காக்கும் வகையில் புதிய மருத் துவ சட்டமூலத்தை ஆறு மாதங்களுக்குள் தயாரித்து சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப் புரை விடுத்துள்ளார்.

அதன்படி, தற்போதுள்ள மருத்துவக் கட்டளைச் சட்டத் தில் உள்ள குறை பாடுகளைத் தவிர் 11

# தேர்தலை நடத்த அழுத்தம் கொடுங்கள்

## இந்திய உயர்ஸ்தானிகரிடம் எடுத்துக்கூறுவோம்

### யாழில் மனோ கணேசன் எம்.பி தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

- பெரமுனவை பிரிக்கும் வேலையில் ரணில் கச்சிதமாக ஈடுபடுகின்றார்.
- ரணில் - சஜித் மீண்டும் ஒன்றிணைய வாய்ப்புள்ளது.
- சமஷ்டி என்பது முன்னணிக்கு மட்டும் உரித்தானதல்ல.

(12ஆம் பக்கம் பார்க்க)

## மருத்துவப் பொருட்களுக்காக 30 பில்லியன் ரூபாய் மேலதிகமாக ஒதுக்கீடு

(கொழும்பு)

மருத்துவப் பொருட்களை கொள்வனவு செய்ய மேலதிகமாக 30 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய் யப்பட்டுள்ளது.

அடுத்த 03 மாதங்களுக்கான அவசர மருத்துவ தேவைகளை பூர்த்தி செய்வதற்காக 30 பில்லியன் ரூபாயை மேலதிகமாக மருத்துவப் பொருட் களுக்காக ஒதுக்குவதற்கு அனுமதி வழங் 11

## உழவு இயந்திரம் தடம்புரண்டு விபத்து

### இளைஞன் உயிரிழப்பு

(முல்லைத்தீவு)

வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளுடன் உழவு இயந்திரம் மோதி தடம்புரண்டு விபத்துக்குள்ளானதில் இளைஞன் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

மேலும் உழவு இயந்திரத்தில் பயணித்த மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர். 11

## காலையில் அலுவலகத்துக்கு கட்டாயம் சமுகமளிக்க வேண்டும்

### அரச ஊழியர்களுக்கு விசேட சுற்றறிக்கை

(கொழும்பு)

மாவட்ட செயலகங்கள் மற் றும் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் அனைத்து அரச உத்தியோகத்தர்களும் வாரத்தின் ஐந்து வேலை நாட் களிலும் காலையில் அலுவல கத்திற்கு சமுகமளிக்குமாறு கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அரச நிர்வாகம், உள்நாட் டலுவல்கள், மாகாண சபை கள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, பொது அர சாங்க உத்தியோகத் 11

## காங்கேசன்துறை - நாகபட்டினம் கப்பல் சேவை விரைவில்

### யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் நடராஜ்

(வவுனியா)

யாழ்ப்பாணம் காங்கேசன் துறைக்கும் தமிழ்நாடு நாகபட் டினத்திற்கு இடையேயான கப்பல் சேவை விரைவில் ஆரம்பமாகவுள்ளதாக யாழ் இந்திய துணைத்தூதுவர் ராகேஷ் நடராஜ் தெரிவித்தார்.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக் கும்போதே இவ்வாறு தெரிவித் தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக் 11

## மன்னாரில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

(மன்னார்)

மன்னார் பிரதான பாலத் தடியில் உள்ள இராணுவ சோதனைச் சாவடிக்கு அரு கில் உள்ள கடற்கரை பகுதி யில் நேற்று புதன் மாலை ஆண் ஒருவரின் சட லம் மீட்கப்பட்டுள் 11

## நாட்டை மீட்டெடுத்து வரும் ரணிலை நிராகரிக்க முடியாது

### அமைச்சர் பந்துல குணவர்த்தன

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட விரும்பு வாராயின் அவரை நிராகரிப் பதற்குக் காரணங்கள் எதுவும் இல்லை என்று அமைச்சர வைப் பேச்சாளரும் அமைச் சருமான பந்துல குணவர்த் தன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங் களிடம் அவர் மேலும் கூறு கையில்,

"ஜனாதிபதித் தேர் தல் அறிவிப்புஇன்னும் 12

## கல்வியங்காட்டில் மோதல் சம்பவம்

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணம் கல்வியங் காட்டுப் பகுதியில் இரு தரப் பினர் இடையே மோதல் சம்ப வம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கல்வியங்காடு எரிபொருள் நிலையத்துக்கு அருகில் உள்ள உணவகத்திலேயே குறித்த மோதல் சம்ப வம் நேற்று இரவு 11

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

ஓய்வுநிலை விவாக, பிறப்பு, இறப்பு
பதிவாளர்
**அமரர்**
**சுப்பிரமணியம்**
**தில்லையம்பலவாணர்**



அவர்களின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திப்பதோடு
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**விவாக, பிறப்பு, இறப்பு**
**பதிவாளர் சங்கத்தினர்,**
**யாழ். மாவட்டம்.**
(C-6999)


# வல்வைப் படுகொலையின் 34 ஆம் ஆண்டு நினைவேந்தல்



(யாழ்ப்பாணம்)

1989 ம் ஆண்டு ஓகஸ்ட் 2ம் திகதி வல்வெட்டித்துறை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் இந்திய இராணுவத்தால் 63 தமிழ் பொது மக்கள் சுட்டும், வெட்டியும், எரித்தும் கொல்லப்பட்டனர்.

அவர்களை நினைவு கூரும் நினைவேந்தல் நேற்று வல்வெட்டித்துறையில் நடைபெற்றது.

இதன்போது பொதுச் சுடர் ஏற்றப்பட்டு, மலர் தூவி, அக வணக்கத்துடன் நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது.

இதில் படுகொலை செய்யப்பட்டவர்களது உறவுகள், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், த.தே.ம.மு பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், கட்சியின் முக்கியஸ்தர் காண்டீபன், கட்சியின் உறுப்பினர்கள், கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

(ம-7, 104)

# கேள்வி அறிவித்தல்

## சபை நிதி, மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை மற்றும் கூட்டிணைந்த சமூகப்பொறுப்பு நிதி வேலைத்திட்டங்கள் - 2023

1. பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் சபை நிதி, மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை மற்றும் கூட்டிணைந்த சமூகப்பொறுப்பு நிதிகளின் ஒரு பகுதி குறித்த வேலைத் திட்டத்திற்கான கொடுப்பனவுக்கென பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
2. செயலாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர் களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.
3. விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
4. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் விலைக்கேள்வியாளர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி மற்றும் கட்டுமான அமைப்புக்கான சிடா (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
5. தேவையான தகைமைகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 04 (Section IV) இலும் மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) இலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை (தொலைபேசி 021-205-0037, தொலைநகல் 021-205-0036, E-Mail: pallaips@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் காலை 09.00 மணி முதல் 14.00 மணி வரை 03.08.2023ஆம் திகதியிலிருந்து 15.08.2023ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம். ஆர்வமுள்ள கேள்விதாரர்
7. பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை எனும் இடத்திலிருந்து 03.08.2023ஆம் திகதியிலிருந்து 15.08.2023ஆம் திகதிவரை அலுவலக நாட்களில் மட்டும் காலை 09.00 மணிக்கும் 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2,000/= (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
8. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் இரு பிரதிகளில் தயாரித்து செயலாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை எனும் முகவரிக்கு 16.08.2023 திகதி மாலை 14.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
9. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி அடையாள இலக்கம் | வேலை விபரம் | நிதி மூலம் | மதிப்பீட்டுத் தொகை VAT நீங்கலாக (Rs Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு (Rs) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/45(3)/PL/cf/tend/05/2023 | Improvement works of segregation shed for dumping ground at puloppalai- Pallai | Council | 1.48 Mn | 45 நாட்கள் | C9 and C8 | 15,000.00 | 01.11.2023 |
| NP/14/45(3)/PL/cf/tend/07/2023 | Improvement work (ground floor) & Construction work (upper floor) – Stage I for iththavil library building at iththavil- Pallai | Council | 2.40 Mn | 60 நாட்கள் | C9, C8 and C7 | 25,000.00 | 15.11.2023 |
| NP/14/45(3)/PL/cf/tend/08/2023 | Renovation work for common hall at pallai town. | Council | 0.87 Mn | 30 நாட்கள் | C9 and C8 | 10,000.00 | 01.11.2023 |
| NP/14/45(3)/PL/CSR/W/01/2023 | Construction of uoorvanikanpattu muththumari amman road- Stage II | CSR | 4.70 Mn | 60 நாட்கள் | C9, C8 and C7 | 50,000.00 | 15.11.2023 |
| NP/14/45(3)/PL/PSDG/W/03/2023 | Construction of cemetery at Thenavil at Pallai | PSDG | 2.26 Mn | 60 நாட்கள் | C9, C8 and C7 | 25,000.00 | 15.11.2023 |

10. கேள்வி கோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் 09.08.2023 திகதி காலை 10.30 மணிக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்துகொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.
11. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியாக நிராகரிக்கவோ, மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழு தலைவருக்கு அதிகாரம் உண்டு.

தயானந்தன் தர்சினி
செயலாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை.

(C-6998) 03.08.2023

# லண்டனில் விபத்து
# மூத்த தமிழ் ஒலிபரப்பாளர் சொக்கநாதன் மரணம்



இலங்கைவானொலியிலும், பி.பி.சி. தமிழோசையிலும் அறிவிப்பாளராக பணியாற்றிய மூத்த தமிழ் ஒலிபரப்பாளர் விமல் சொக்கநாதன் (வயது 75) லண்டனில் இடம்பெற்ற விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

விமல் சொக்கநாதன் மறைவுக்குப் பலரும் சமூக ஊடகங்களின் வாயிலாக இரங்கல் தெரிவித்து வருகின்றனர். விமல் சொக்கநாதன் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்து யாழ்ப்பாணத்தில் தனது நூல் வெளியீட்டு விழாவில் பங்கேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.(ம-7)

# அனைத்து மாணவர்களும் தாதியராகும் வாய்ப்பு
## சுகாதார அமைச்சர்

விஞ்ஞான பாடம் மாத்திரமன்றி அனைத்து பாடங்களையும் கற்ற மாணவர்களுக்கும் தாதியர் பணியில் நுழைவதற்கான வாய்ப்புகளை வழங்குவதற்கு தயாராக உள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

அத்துடன் நியாயமான மற்றும் திறந்த சந்தைக்கு இடமளிக்கும் வகையில் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை சட்டம் நீக்கப்படும் எனவும் இலங்கை மருத்துவ சபை சட்டமும் முற்றாக இல்லாதொழிக்கப்படும் என்றும் சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, போதைப்பொருள் பரிசோதனைக்கான அங்கீகாரம் பெற்ற ஆய்வகத்தை அமைப்பதற்கு உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆதரவையும் வழிகாட்டலையும் எதிர்பார்ப்பதாகவும் சுகாதார அமைச்சர் டுவிட்டர் பதிவொன்றில் தெரிவித்துள்ளார். (ம-7)

# இ.போ.ச - கனரக வாகனம் விபத்து
# பெண் உயிரிழப்பு; 15 பேர் காயம்

(கொழும்பு)

இ.போ.ச பேருந்தும் - கனரக வாகனமும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 15 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

வரக்காப்பொல - துல்ஹிரிய பகுதியில் நேற்று புதன்கிழமை காலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இ.போ.சபைக்கு சொந்தமான பஸ் ஒன்றும் கனரக வாகனமும் மோதியே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)


# தவறிவிட்டது

பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு சந்திக்கு அண்மையில் P.சண்முகதாஸ் என்பவருடைய அடையாள அட்டையும் (620664090V), வங்கி கடன் அட்டையும் அடங்கிய பேர்ஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் கண்ட இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
(16590)

**077 713 0716**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 60 வீதமான சிறைச்சாலைக் கைதிகள் போதைப்பொருளுடன் தொடர்புடையவர்கள்

(கொழும்பு)

2023 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நாடு முழுவதிலும் உள்ள சிறைச்சாலைகளிலுள்ள கைதிகளில் 60 வீதமானோர் போதைப் பொருள் தொடர்பான குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டவர்கள் என சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அண்மைக் காலமாக நாட்டிலுள்ள சிறைச்சாலை கைதிகளின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 29,000 பேர் உள்ளதாகவும் சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளரும், மேலதிக ஆணையாளருமான சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

நாட்டிலுள்ள சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கக்கூடிய கைதிகளின் எண்ணிக்கை 200 வீதமாக அதிகரித்துள்ளது என்றும் சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேநேரம் 20 வருடங்களுக்கு மேலாக சிறைத் தண்டனை அனுபவிக்கும் கைதிகளை புலனாய்வு அறிக்கைகளின் அடிப்படையில் விடுதலை செய்வது தொடர்பில் ஆலோசித்து வருவதாக சிறைச்சாலைகள் அலுவல்கள் அமைச்சர், விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

சிறைக் கைதிகளின் உணவு தேவைக்காக மாத்திரம் வருடாந்தம் 5.5 பில்லியன் ரூபாய் செலவு செய்யப்படுவதாகவும் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# இலங்கையில் மின்வெட்டு தவிர்க்க முடியாது

# மின்சார சபை எச்சரிக்கை

(கொழும்பு)

**விரைவில் மீண்டும் நாடு முழுவதும் மின்வெட்டை அறிவிக்க நேரிடும் என இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.**

நாட்டின் பல பகுதிகளில் தற்போது நிலவும் வறட்சியான காலநிலையின் கடுமையான தாக்கம் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக பொறியியலாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

நீர்மின் உற்பத்தி நாளுக்கு நாள் குறைந்து வருவதால் விவசாயத் தேவைகளுக்காக சமனல நீர்த்தேக்கத்திலிருந்து நீர் விடுத்தால் தென் மாகாணத்திற்கு 4 மணிநேரம் மின்சாரம் துண்டிக்கப்படும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர ஏற்கனவே அறிவித்துள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

தனியார் டீசல் மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் ஏனைய அனைத்து மின் உற்பத்தி நிலையங்களில் இருந்தும் தொடர்ச்சியாக மின்சாரம் வழங்கப்படுகிறது.

எரிபொருளின் மூலம் நாட்டின் மின்சாரத் தேவையை பூர்த்தி செய்வதால் இந்த ஆண்டு இலங்கை மின்சார சபைக்கு இழப்பு 500 கோடி ரூபாயை தாண்டும் என்றும் பொறியியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக தற்போது நிலவும் வறட்சி காரணமாக மின்சாரத்தை துண்டிப்பதை தவிர வேறு வழியில்லை என அவர்கள் வலியுறுத்துகின்றனர். (நி-5)

### போலி ஆவணங்களில்

# இத்தாலி செல்ல முயன்ற யாழைச் சேர்ந்த தம்பதி கைது

(கொழும்பு)

போலி ஆவணங்களைப் பயன்படுத்தி இத்தாலிக்குச் செல்ல முயன்ற இலங்கையைச் சேர்ந்த இளம் தம்பதியினர் குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகளால் கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்,

யாழ்ப்பாணம், சங்கானைப் பிரதேசத்தில் வசிக்கும் இளம் தம்பதியினரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் மீது ஏற்பட்ட சந்தேகத்தின் அடிப்படையில் இவர்களின் பயணப் பொதிகளை சோதனையிட்ட போது, பொய்யான தகவல்களுடன் தயாரிக்கப்பட்ட இரண்டு கடவுச் சீட்டுகளும் போலி வீசாவும் இந்த இளைஞனிடம் கண்டு பிடிக்கப்பட்டன.

இதனையடுத்து, குறித்த யுவதியை சோதனைக்கு உட்படுத்தியபோது அவரது உள்ளாடைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த போலி இத்தாலி வீசா கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட தம்பதியினர் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (நி-5)

# 13 ஆவது திருத்தம் தொடர்பில் உரையாற்றவுள்ள ஜனாதிபதி

(கொழும்பு)



அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை பலப்படுத்துவதற்கான சகல யோசனைகளையும் பாராளுமன்றில் சமர்ப்பிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

13 ஆவது திருத்தத்துக்கு அமைய அதிகாரப் பகிர்வை வழங்கல் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த வாரம் பாராளுமன்றத்தில் விசேட உரை ஆற்றவுள்ளார்.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை பலப்படுத்துவதற்கான சட்டதிட்டங்கள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன்போது தெளிவுபடுத்தவுள்ளார்.

பொலிஸ் அதிகாரம் தவிர்ந்த ஏனைய அதிகாரங்களை எவ்வாறு பகிர்வது என்பது தொடர்பில் இந்த விசேட உரையின் போது ஜனாதிபதி தெளிவாக குறிப்பிடவுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முயற்சித்தாலும் பாராளுமன்றத்திலுள்ள எதிர்க் கட்சிகளும் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ்க் கட்சிகளும் இவ்விடயத்தில் ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வராமையானது ஜனாதிபதியின் அந்த முயற்சிகளுக்குத் தடையாக அமைந்துள்ளதாக ஜனாதிபதி அலுவலகத்தின் உயர் அதிகாரியொருவர் குறிப்பிட்டார்.

13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதன் ஊடாக தமிழ் மக்களின் அபிலாஷைகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றும் என எதிர்பார்ப்பதாக இந்தியப் பிரதமர் மோடி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயத்தின் போது புதுடில்லியில் வைத்து தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# தேசிய கீதத்தை தமிழில் இசைப்பதுவும் 13 ஆவது அரசியலமைப்பும் தேவையற்றதாகும்

## காமினிலொகுகே

(கொழும்பு)

தேசிய கீதத்தை திரிபுபடுத்தி பாடுவதும் அதை தமிழ் மொழியில் இசைப்பதும் தண்டனைக்குரிய தவறாகும். புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டால் 13 ஆவது அரசியலமைப்பு தேவையற்றதாகும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் காமினிலொகுகே தெரிவித்தார். கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது. அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்தும் அதிகாரம் தனக்கு இல்லை பாராளுமன்றமே அதை தீர்மானிக்க வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வகட்சி மாநாட்டில் தெளிவாக குறிப்பிட்டார்.

நாட்டில் தமிழர்களுக்கு மாத்திரமல்ல ஒட்டுமொத்த மக்களுக்கும் பிரச்சினை உள்ளது. ஒரு தரப்பினரது பிரச்சினைக்கு அரசியலமைப்பு ஊடாக மாத்திரம் எவ்வாறு தீர்வு காண்பது. அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கு தென்னிலங்கையில் கடும் எதிர்ப்பு காணப்படும் பின்னணியில் அதை நடைமுறைப்படுத்துவது சாத்தியமற்றது.

30 வருடகால யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை துரிதமாக அபிவிருத்தி செய்து மாகாண சபைத் தேர்தலை நடத்தி அப்பிரதேச மக்களின் அரசியல் உரிமைகளை உறுதிப்படுத்தினார். அந்த உரிமையை தமிழ் தேசிய கூட்டமைப்பினர் பாதுகாத்துக் கொள்ளவில்லை.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதை காட்டிலும் புதிய அரசியலமைப்பு உருவாக்கம் குறித்து அவதானம் செலுத்த வேண்டும். 69 இலட்ச மக்களின் கோரிக்கை புதிய அரசியலமைப்பை மையப்படுத்தியதாக உள்ளது. ஆகவே புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டால் 13 ஆவது திருத்தம் தேவையற்றதாக்கப்படும் என அவர் தெரிவித்தார். (நி-5)

# ஒக்டோபர் மாதம் வரை மழைவீழ்ச்சி கிடைக்காது

## வளிமண்டலவியல் திணைக்களம்

(கொழும்பு)

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் வரை இலங்கைக்கு போதியளவு மழைவீழ்ச்சி பதிவாகாது என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

பருவப் பெயர்ச்சியின் போதும் போதியளவு மழை பெய்யவில்லையென திணைக்களத்தின் பணிப்பாளர் ஷிரோமனீ ஜயவர்தன தெரிவித்தார்.

இதனிடையே, நாட்டில் தற்போது நிலவும் வறட்சி காரணமாக நீரேந்துப் பகுதிகளின் நீர்மட்டம் சடுதியாக குறைவடைந்து வருகின்றது.

இதேவேளை, மின் உற்பத்தி நிலையங்களை அண்மித்த நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் 20 வீதம் வரை குறைவடைந்துள்ளதாகவும் இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது. (நி-5)

# அஸ்வெசும பயனாளர்களுக்கான முதலாவது கொடுப்பனவு இந்த வாரம்

## சமூக நலன்புரி நன்மைகள் சபை

(கொழும்பு)

அஸ்வெசும பயனாளர்களுக்கான முதலாவது தவணை கொடுப்பனவு இவ்வாரத்தில் வழங்கப்படவுள்ளதாக சமூக நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

அஸ்வெசும திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட பயனாளர்களுக்கான வங்கி கணக்குகளைத் திறக்கும் செயற்பாடு 95 வீதம் நிறைவடைந்துள்ளதாக சபை குறிப்பிட்டுள்ளது.

இந்தநிலையில் அஸ்வெசும பயனாளர்களுக்கு அவர்களின் பிரிவிற்கேற்ப மாதாந்தம் 15000, 8,500, 5000 ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இதனிடையே, அஸ்வெசும திட்டம் தொடர்பாக கிடைத்துள்ள மேன்முறையீடுகள், ஆட்சேபனைகளை பரிசீலித்ததன் பின்னர் மற்றுமொரு பயனாளர்கள் குழு இந்த திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படுவரென சமூக நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

அஸ்வெசும நிவாரணத் திட்டத்தின் கீழ் 20 இலட்சம் பயனாளர்களின் வங்கி கணக்குகளில் கொடுப்பனவு [illegible] (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லங்கா பிறீமியர் லீக்- 2023
# தம்புள்ளை, காலி அணிகள் வெற்றி




லங்கா பிறீமியர் லீக் இருபது-20 தொடரின் நான்காவது லீக் போட்டியில், தம்புள்ளை அவுரா அணி 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது.

கொழும்பு-ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற லைக்காவின் ஜப்னா கிங்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஜப்னா கிங்ஸ் அணி லைக்காவின் ஜப்னா கிங்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 129 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதன்போது அணியின் அதிக பட்ச ஓட்டங்களாக சரித் அசலங்க 56 ஓட்டங்களையும் ஹிரி தோய் 24 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

அதேபோல தம்புள்ளை அவுரா அணியின் பந்துவீச்சில் பினுர பெனார்டோ 2 விக்கெட்டுகளையும் தனஞ்சய டி சில்வா, நூர் அஹமட் தஹானி, ஹெய்டன் கெர் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 130 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்குக களமிறங்கிய தம்புள்ளை அவுரா அணி, 16.2 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் தம்புள்ளை அணி 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிக பட்ச ஓட்டங்களாக, அவிஷ்க பெனார்டோ 52 ஓட்டங்களையும் குசல் பெரேரா 32 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

லங்கா பிரீமியர் லீக் இருபது -20 தொடரின் ஐந்தாவது லீக் போட்டியில், காலி டைடன்ஸ் அணி 83 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

கொழும்பு-ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில், காலி டைடன்ஸ் மற்றும் பி-லவ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற காலி டைடன்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய காலி டைடன்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 180 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக டிம் செய்பர்ட் 74 ஓட்டங்களையும் சகிப் அல் ஹசன் 30 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். அதேபோல காலி டைடன்ஸ் அணியின் பந்துவீச்சில் ஆமிர் ஜமால், மொஹமட் ஹஸ்னெய்ன், வனிந்து ஹசரங்க ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 181 என்ற கடினமான வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய பி-லவ் அணி, 17.1 ஓவர்கள் நிறைவில் 97 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. இதனால் காலி டைடன்ஸ் அணி 83 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிக பட்ச ஓட்டங்களாக, அஷேன் பண்டரா 27 ஓட்டங்களையும் இசுரு உதான 16 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். (4)




## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2879

### இந்துஜா




### சதீஸ்




### சாரங்கன்




### கண்ணன்




### ரேவதி




### ரேகா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமஷ்டி தான் வேண்டும் என்றால்

# நாட்டில் மீண்டும் இரத்த ஆறு ஓடும்

## உதயகம்மன்பில எச்சரிக்கை

(கொழும்பு)

**"சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சமஷ்டி வேண்டும் என்று விடாப்பிடியாக இருந்தால் இந்த நாட்டில் மீண்டும் இரத்தக்களரி ஓடும் என்று கூறி வைக்க விரும்புகின்றோம் என புதிய ஹெல உறுமயவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதயகம்மன்பில தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கிடைக்க மாட்டாத ஒன்றைத் திருப்பித் திருப்பிக் கேட்டால் கிடைக்கும் என்று சம்பந்தன் அணியினர் எண்ணுகின்றனர். கிடைக்க மாட்டாத சமஷ்டியைக் அவர்கள் கேட்பதால் அதில் விடாப்பிடியாக இருப்பதால் இன முரண்பாடு மேலும் உச்சமடையும். மீண்டும் இரத்தக்களரி தான் ஓடும்.

நாட்டில் இன முரண்பாடு உக்கிரமடைய நாம் விரும்பவில்லை. ஆனால், அந்த மோசமான நிலைமையைத் தமிழ்த் தலைவர்கள் விரும்புகின்றனர்.

அதை வைத்து நீண்ட காலத்துக்கு அரசியல் பிழைப்பு நடத்தலாம் என்று அவர்கள் தப்புக் கணக்குப் போடுகின்றனர் என அவர் தெரிவித்தார். (நி-5)



# இந்திய ரூபாய் இலங்கையில் செல்லுபடியாகாது

(கொழும்பு)

இந்திய ரூபாய் இலங்கையில் செல்லுபடியாகும் நாணயம் அல்ல என மத்திய வங்கி தெரிவித்துள்ளது. இதன்படி, நாட்டிற்குள் மேற் கொள்ளப்படும் அனைத்து கொடுக்கல்-வாங்கல்களுக்கும் இலங்கை ரூபாவை மாத்திரமே பயன்படுத்த முடியும் என மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இந்திய ரூபாய் குறித்து தற்போது பரவி வரும் தவறான கருத்துக்களை தெளிவுபடுத்தும் வகையில் இலங்கை மத்திய வங்கி இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

வெளிநாட்டு நாணயங்களாக வங்கித் தொழில் சட்டம் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிச் சட்ட ஏற்பாடுகளின் கீழ் 2022 ஒகஸ்டில் புதுப்பிக்கப்பட்ட அறிக்கையின்படி இந்திய ரூபாயுடன் 16 நாணயங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

இந்த 16 நாணயங்களை அங் கீகரித்ததன் முக்கிய நோக்கம் நாடுகளுக்கிடையிலான வர்த்தக மற்றும் முதலீட்டு உறவுகளை ஊக் குவிப்பதாகும் என மத்திய வங்கி சுட்டிக் காட்டியுள்ளது. (நி-5)

# வடக்கில் ஆரம்பிக்கப்படவுள்ள தென்னை முக்கோண வலயம்

(கொழும்பு)

யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் முல்லைத்தீவை மையமாக கொண்டு வடமாகாணத்தில் இரண்டாவது தென்னை முக்கோண வலயத்தை ஆரம்பிக்கவுள்ளதாக பெருந்தோட்ட மற்றும் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

செப்டெம்பர் 2 ஆம் திகதி கொண்டாடப்படும் உலக தென்னை தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ் யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் முல்லைத்தீவை மையமாக கொண்டு வடமாகாணத்தில் இரண்டாவது தென்னை முக்கோணத்தை ஆரம்பிக்க இருப்பதாகவும் மேலும் தெரிவித்தார். (நி-5)

# ஆசிரிய சேவையில் 5,450 பட்டதாரிகள்

## இணைத்துக் கொள்ள அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

5 ஆயிரத்து 450 பட்டதாரிகளை ஆசிரிய சேவையில் உள்வாங்குவதற்கு அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கல்வி தர மேம்பாடு தொடர்பில், பதுளையில் இடம்பெற்ற அதிபர்களுடனான சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, தொழில்நுட்பம், ஆங்கிலம் மற்றும் வெளிநாட்டு மொழிகள் ஆகியனவற்றை கற்பிப்பதற்காக குறித்த பட்டதாரிகள் சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

அவர்கள், நாடளாவிய ரீதியில் உள்ள ஆசிரிய வெற்றிடங்களுக்காக உள்வாங்கப்படவுள்ளனர். (நி-5)

# துயர் பகிர்கின்றோம்



செல்வி.

## ஜெயரஞ்சினி செந்தில்வேல்

(ஓய்வுநிலை ஆசிரியர், பிரதி அதிபர் யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பழை)

பிறப்பு 27.11.1955

இறப்பு 01.08.2023

எமது யூனியன் கல்லூரியில் ஆசிரியராக, பிரதி அதிபராக கடமையாற்றி ஓய்வு பெற்ற செல்வி.ஜெயரஞ்சினி செந்தில்வேல் அவர்கள் நேற்று முன்தினம் இறைபதமடைந்த செய்தி கேட்டு நாமும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

யா/யூனியன் கல்லூரிச் சமூகம், தெல்லிப்பழை.

# இராசிபலன்

03.08.2023
ஆடி 18, வியாழக்கிழமை
துதியை முன்னிரவு 8.16 மணிவரை

அவிட்டம் பிற்பகல் 1.57 மணிவரை
சுபநேரம் -7.34-9.04 மணிவரை
இராகுகாலம்-1.34-3.04 மணிவரை

சந்திராஷ்டமம்-
பூசம், ஆயிலியம்.

வளவன்

**மேஷம்**: குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**கடகம்**: கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், தேக நலனில் கவனம் செலுத்த வேண்டிய நாள், திருடர் பயம் உண்டு, கௌரவக் குறைவான நாள்.

**துலாம்**: வங்கிச் சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், வளர்ச்சி கூடும் நாள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**மகரம்**: பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**ரிஷபம்**: அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும்.

**சிம்மம்**: மனதிற்கினிய சம்பவமொன்று நடைபெறும் வாய்ப்புண்டு, தொலைபேசித் தகவல்கள் மகிழ்ச்சி தரும், உறவினர் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்**: சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு.

**கும்பம்**: நேற்றைய பிரச்சினை ஒன்று இன்று நல்ல முடிவுக்கு வரும், சான்றோர்களின் சந்திப்பால் சந்தோசமடைவீர்கள், கற்பனை மிகுதியான நாள்.

**மிதுனம்**: தடைப்பட்ட காரியங்கள் தானாக நடைபெறுவது கண்டு ஆச்சரியம் அடைவீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், பகை விலகி பாசம் கூடும் நாள்.

**கன்னி**: முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், போசன சுகமுண்டு, தன்னம்பிக்கை துளிர் விடும் நாள்.

**தனுசு**: நீண்டநாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், நண்பர்கள் கடைசி நேரத்தில் கைகொடுத்து உதவ முன்வருவர், போசன சுகமுண்டு.

**மீனம்**: ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், எப்படி நடக்கமோவென நினைத்த காரியம் நல்ல விதமாக அமையலாம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திடீர் தீப்பரவல்

# 50 தென்னைகள் நாசம்

## தருமபுரத்தில் சம்பவம்

**(தருமபுரம்)**

**கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட தருமபுரம் பகுதியில் அமைந்துள்ள தும்புத் தொழிற்சாலை ஒன்றில் நேற்று திடீரென ஏற்பட்ட தீயினால் 50இற்கும் மேற்பட்ட பயன் தரக்கூடிய நிலையில் இருந்த தென்னை மரங்கள் முற்று முழுதாக எரிந்து நாசமாகியுள்ளன.**





வீட்டின் உரிமையாளர்கள் வீட்டில் இல்லாத நிலையில் தும்பு தொழிற்சாலையும் அன்றைய தினம் தொழில் நடவடிக்கை இடம்பெறாத நிலையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தீப்பரவலானது அப்பகுதி மக்கள் இடர்முகாமைத்துவக் குழுவினர், கிளிநொச்சி தீயணைப்பு பிரிவினரின் உதவியுடன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதுடன் இச்சம்பவம் தொடர்பாக தருமபுர பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (4-5-316)

# வாகன இலக்கத்தகடுகளை பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்கள தலைமை அலுவலகத்திலிருந்து கடந்த 26 ஆம் திகதி யாழ். அலுவலகத்திற்கு கிடைக்கப் பெற்ற வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல், யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திலும் பொதுமக்களின் பார்வைக்காக அறிவிப்புப் பலகையில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது.

மேலும் மாவட்டச் செயலக இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

புதிதாக வாகனங்களைப் பதிவு செய்த உரிமையாளர்கள் வாகனப் பதிவுப் புத்தகம், தேசிய அடையாள அட்டை என்பவற்றையும் வாகன உரிமை மாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த இரு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத்தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டும் தாள் என்பவற்றையும் யாழ்.மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து அலுவலகத்தில் குறிப்பிட்ட திகதியில் குறித்த நேரத்திற்கு சமர்ப்பித்து தங்கள் வாகனங்களுக்குரிய இலக்கத்தகடுகளைப் பெற்றுக் கொள்ளலாம் என யாழ்.மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள உதவி ஆணையாளர் ஆர்.சிவஹரன் அறிவித்துள்ளார். (4-5)

# யாழில் வீடு புகுந்து திருட்டில் ஈடுபட்டவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வீடு புகுந்து கொள்ளையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 30 ஆம் திகதி யாழ். நகர் பகுதியை அண்டிய பகுதி ஒன்றில் உள்ள வீட்டில் இருந்த சுமார் 2 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகள் கொள்ளையடிக்கப்பட்டன.

நகை கொள்ளை தொடர்பில் உரிமையாளரால் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்த நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை நபர் ஒருவரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (4-5-33)

# இலவச கண்புரை சத்திரசிகிச்சை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலகப் பிரதேசத்தில் வசிக்கும் கண்புரை சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய நோயாளர்களைத் தெரிவு செய்யும் இலவச கண் பரிசோதனைமுகாம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் கோப்பாய் பிரதேச வைத்தியசாலையில் இடம்பெறவுள்ளது.

அதேபோன்று உடுவில் பிரதேச செயலகப் பிரிவினைச் சேர்ந்த கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நோயாளர்களைத் தெரிவு செய்யும் இலவச மருத்துவ முகாமும் அன்றைய தினமே 9 மணி தொடக்கம் உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையிலும் நடைபெறவுள்ளது.

குறித்த முகாமில் கண்புரை சத்திரசிகிச்சைக்குத் தெரிவு செய்யப்படும் நோயாளர்களுக்கான சத்திரசிகிச்சை மேற்கொள்ளும் திகதி பின்னர் அவர்களுக்கு அறியத் தரப்படும்.

கண்புரை சத்திரசிகிச்சைக்குத் தெரிவு செய்யப்படும் நோயாளர்களை அந்தந்தப் பிரதேசத்திற்குரிய வைத்தியசாலைகளில் இருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு அழைத்து வருவதற்கும் சத்திரசிகிச்சை முடிவடைந்த பின்னர் மீண்டும் யாழ்.போதனா வைத்தியசாலையில் இருந்து அவர்களது பிரதேசத்திலுள்ள வைத்தியசாலைக்கு கூட்டிச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் சுகாதார திணைக்களத்தினரால் இலவசமாக மேற்கொள்ளப்படும்.

எனவே கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுடைய நோயாளர்கள் மேற்படி பரிசோதனை முகாமில் கலந்து கொண்டு தங்களது பெயர்களைப் பதிவு செய்யுமாறு யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (4)

# விழிப்புணர்வு நடைபயணம்

(யாழ்ப்பாணம்)

புதிய வெளிச்சமட் அமைப்பினரால் யாழில் "எமது தேசத்தின் வளங்களினை மதிப்புக் கூட்டுதல் ஏன் அவசியம்" எனும் தொனிப் பொருளில் சமூக விழிப்புணர்வு நடைப்பயணம் எதிர்வரும் 6 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த நடைபயணமானது யாழ். பொதுசன நூலக முன்றலிலிருந்து காலை 6.30 இற்கு ஆரம்பமாகவுள்ளது என ஏற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது. (4-5-33)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு இல.15 சிறாம்பியடி லேன் யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள தமிழ்ச்சங்கத்தின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் தமிழ்ச் சங்கத்தின் அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு செயலாளர் கு.றஜீபன் அறிவித்துள்ளார். (4-5)

# சந்தைகளில் நேற்றைய விலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 200 | 200 | 240 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 300 | 450 | 300 | 400 |
| தக்காளி | 280 | 300 | 320 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 240 | 220 | 300 |
| கோவா | 250 | 220 | 300 | 300 |
| கரட் | 350 | 520 | 520 | 600 |
| பூசணி | 120 | 140 | 120 | 150 |
| புடோல் | 80 | 80 | 100 | 200 |
| வாழைக்காய் | 150 | 150 | 140 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 250 | 300 | 350 |
| பெரிய வெங்காயம் | 160 | 140 | 140 | 300 |
| பாகற்காய் | 350 | 350 | 200 | 400 |
| வெண்டக்காய் | 160 | 100 | 80 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 170 | 180 | 200 |
| பயற்றங்காய் | 200 | 120 | 140 | 140 |
| லீக்ஸ் | 260 | 250 | 240 | 300 |
| பீற்றூட் | 180 | 200 | 180 | 250 |
| கறிமிளகாய் | 350 | 400 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 300 | 300 | 360 | 300 |
| போஞ்சி | 500 | 500 | 500 | 600 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | -- | 200 |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 60 | 100 |
| தேசிக்காய் | 200 | 200 | 200 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60 | 60-80 |
| இராசவள்ளி | 300 | 200 | 260 | 250 |
| வெங்காயப்பூ | 160 | 150 | 180 | 300 |
| முள்ளங்கி | 80 | 80 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 50 | 35 | 20 | 60 |
| ஈரப்பலா | 140 | 150 | 80 | 100 |

# ரணில் - சஜித்தை இணைக்க பேச்சுக்கள் இடம்பெறுகின்றன

## மனோ எம்.பி

(யாழ்ப்பாணம்)

பொதுஜன பெரமுனவை பிரிக்கும் வேலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கனகச்சிதமாக ஈடுபட்டு கொண்டு இருக்கின்றார் என தெரிவித்த தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று காலை ஊடகங்களின் கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இதனை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், ரணில் விக்கிரமசிங்கவையும் சஜித் பிரேமதாஸவையும் இணைப்பதற்கான பேச்சுக்கள் இடம் பெறுகின்றன. எல்லாவற்றையும் ஊடகங்களுக்கு சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

சஜித் பிரேமதாஸ எங்கள் கூட்டணிக்கே தலைவரொழிய சஜித் பிரேமதாஸ எனக்கு தலைவர் அல்ல எனத் தெரிவித்தார். (4-5-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாச் சிறையில் அனைத்து கைதிகளுக்கும் தடுப்பூசி

(வவுனியா)

வவுனியா சிறைச்சாலையில் தட்டம்மை தடுப்பூசி பெறாத அனைத்து கைதிகளுக்கும் தடுப்பூசி போடப்பட்டுள்ளதாக தொற்றுநோய் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

சிறைச்சாலைகுள் அம்மை நோய் பரவுவதைக் கட்டுப்படுத்த தேவையான அனைத்து அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளதாக அந்த பிரிவு தெரிவித்துள்ளது.

வவுனியா சிறைச்சாலையில் நான்கு கைதிகளுக்கு அம்மை நோய் இருப்பது கண்டறியப்பட்டதையடுத்து ஜூலை 25 ஆம் திகதி முதல் தற்காலிகமாக மூடப்பட்டது.

கைதிகள் உறவினர்களை சந்திப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் களை சந்திக்கும் வாய்ப்புகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் சிறைச்சாலைகள் பேச்சாளர் சந்தன ஏகநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேநேரம் கைதிகளை சட்ட நடவடிக்கைகளுக்காக நீதிமன்றங்களுக்கு அழைத்துச் செல்வதும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

வவுனியாச் சிறைச்சாலையில் கைதிகளின் எண்ணிக்கை 400ஐ தாண்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (4-5)



சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு மற்றும் மாற்றத்திற்கான இளையோர் அமைப்பின் ஏற்பாட்டில் "கறுப்பு ஜூலை இருள் களையை இசையால் சுடரேற்றுவோம்" என்ற தொனிப்பொருளில் யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் விடுதலை தாளங்கள் இசை நிகழ்வு கடந்த 30 ஆம் திகதி இடம்பெற்றது.

# மேய்ச்சல் நிலத்தை வழங்கக் கோரி மாடுகளுடன் பண்ணையாளர்கள் கிளிநொச்சியில் போராட்டம்

(கிளிநொச்சி)

**கிளிநொச்சியில் மேய்ச்சல் நிலத்தை வழங்குமாறு கோரி மாடுகளுடன் பண்ணையாளர்கள் நேற்று புதன்கிழமை கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.**



கிளிநொச்சி கோணாவில் கிராமத்தைச் சேர்ந்த கால் நடை வளர்ப்பாளர்களே தங்களுக்குரிய மேய்ச்சல் நிலத்தை கோரி இந்த கவனயீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர்.

நீண்டகாலமாக தங்களுக்குரிய மேய்ச்சல் நிலம் தொடர்பில் பல்வேறு தரப்பினர்களிடம் கோரிக்கை விடுத்த போதும் அது தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் விதைப்பு மற்றும் வறட்சியான காலங்களில் தங்களது கால்நடைகளை வளர்ப்பதில் கடும் நெருக்கடிகளை எதிர்கொள்வதாகவும் தெரிவித்துள்ள கால்நடை வளர்ப்பாளர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் இந்த விடயத்தல் உரிய கவனம் செலுத்தி விரைவாக மேய்ச்சல் நிலத்தை ஒதுக்கீடு செய்து தருமாறு கோரிக்கை விடுத்தனர். (4-5-316)

# 'மலையகம் 200' நடைபவனி புதுக்குடியிருப்பில் இருந்து ஆரம்பம்

(முல்லைத்தீவு)

மலையக மக்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 வருடங்கள் பூர்த்தியாகியுள்ள நிலையில் அதனை நினைவு கூரும் வகையில் ஆரம்பிக்கப்பட்ட நடைபவனி, நேற்று புதுக்குடியிருப்பில் இருந்து ஆரம்பமாகியது.



மன்னார் முதல் மாத்தளை வரை என்ற தொனிப்பொருளில் ஆரம்பிக்கப்பட்ட குறித்த நடைபவனி காலை 9.30 மணிக்கு புதுக்குடியிருப்பு சந்தியிலிருந்து ஆரம்பமாகியிருந்தது.

குறித்த நடைபயணத்தில் மலையக மக்களுக்கு ஆதரவை தெரிவிக்கும் வகையில் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தினரின் பங்குபற்றுதலோடு மத குருக்கள், அரசியல் பிரதிநிதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட இளைஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.


குறித்த நடைபவனியில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் ஆதரவை வழங்கும் விதமாக தாய்த் தமிழ் பேரவையினால் தாகசாந்தி வழங்கி வைக்கப்பட்டது.

தமது போராட்டம், சிறந்த அங்கீகாரம், கல்வி, சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மீதான உறுதியான நடவடிக்கை, ஊதியம், வேலை, தொழிலாளர்களுக்கு சட்டப் பாதுகாப்பு, வீடமைப்பு மற்றும் வாழ்வாதாரங்கள் என்பனவற்றை வலியுறுத்தியே இந்த நடைபவனி இடம்பெறுகின்றது. (4-5-299)



கிளிநொச்சி மகாவித்தியாலய பாடசாலை சமூகத்தின் சுற்றாடல் சமூக பணி நேற்று முன்னெடுக்கப்பட்டது. பாடசாலை அதிபர் ஜெயந்தி தனபாலசிங்கம் தலைமையில் கிளிநொச்சி மகா வித்தியாலய சாரணிய குழுவினால் குறித்த பணி முன்னெடுக்கப்பட்டது. (படம்- சப்தசாங்கரி)

# 150 கிலோ எடை கொண்ட அரியவகை கடலாமையுடன் மன்னாரில் ஒருவர் கைது



(மன்னார்)

மன்னாரில் வாகனம் ஒன்றில் உயிருடன் மறைத்து கொண்டு செல்லப்பட்ட சுமார் 150 கிலோ கிராம் எடை கொண்ட அரிய வகை கடல் ஆமையை மன்னார் விசேட பொலிஸ் புலனாய்வு பிரிவினர் மீட்டுள்ளதுடன் வாகன சாரதியையும் கைது செய்துள்ளனர்.

வாகனம் ஒன்றில் ஆமை கடத்தப்படுவதாக பொலிஸ் விசேட புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில், மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சௌத்பார் பிரதான வீதி ரெலிக்கோம் சந்தி பகுதியில் சந்தேகத்துக்கு இடமான வாகனம் ஒன்றை நிறுத்தி சோதனை செய்த போதே குறித்த வாகனத்தில் சூட்சுமமான முறையில் ஆமை மறைத்து வைக்கப்பட்டிருந்தது கண்டறியப்பட்டது.

மீட்கப்பட்ட கடலாமை நீதிமன்ற நடவடிக்கைகளின் பின்னர் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளிடம் கையளிக்கப்பட உள்ள நிலையில் தற்காலிகமாக பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

குறித்த கடலாமையை வாகனத்தில் கொண்டு சென்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட வாகன சாரதி மேலதிக விசாரணைகளின் பின்னர் மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் ப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-5-285)

# முல்லைத்தீவு பழைய செம்மலை நீராவியடி பிள்ளையார் வருடாந்த பொங்கல் உற்சவம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் பழைய செம்மலை நீராவியடி பிள்ளையார் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவமானது நாளை வெள்ளிக்கிழமை சிறப்பாக நடத்துவதற்கு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என ஆலய பரிபால சபையினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

பிரதமகுருவாக திருஞானசம்பந்த குருக்கள், ஆலயபூசகர் சிவபாதன் கணேசபுவன் ஆகியோர்களால் வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் விஷேட அபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து 11.30 மணியளவில் விநாயக பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் விஷேட பூஜைகள் நடைபெற்றதை தொடர்ந்து விபூதி பிரசாதம் வழங்குதலும் களாஞ்சி பிரசாதம் வழங்குதலும் நடைபெற்று அன்னதானம் வழங்கப்படவுள்ளது.

தொடர்ந்து ஆலய பூசகரால் பாரம்பரிய முறைப்படி 4.30 மணியளவில் கோட்டக்கேணி பிள்ளையார் ஆலயத்தில் இருந்து மடப்பண்டம் எடுத்து வரப்பட்டு பூசை வழிபாடுகள் இடம்பெற்று மறுநாள் அதிகாலை 4 மணியளவில் பரிகலம் வழி விடுதல் நிகழ்வு இடம்பெறும்.

எனவே அன்றைய தினத்தில் அனைத்து பக்தர்களையும் ஒன்று திரண்டு ஆலய வழிபாட்டில் ஈடுபடுவதற்கு ஆலய நிர்வாகத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு பழைய செம்மலை நீராவியடி பிள்ளையார் ஆலய வளாகத்தை அபகரித்து சட்டவிரோதமாக பௌத்த விகாரை அமைத்து பல்வேறு நெருக்கடிகள் வழங்கப்பட்டு வந்திருந்தது. தற்போது குறித்த ஆலயத்தின் வழிபாடுகள் தொடர்ச்சியாக ஆலய நிர்வாகத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-5-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 246





அந்தக் காட்சி இன்றைக்கு நினைத்துப் பார்த்தாலும் என் மனக் கண்முன்னால் நிற்கிறது.

இவ்விதம் கூறிக் கரிகாலன் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டு மௌனமாயிருந்தான். வானத்தில் அச்சமயம் உலாவிய மெல்லிய மேகத் திரைகளுக்குள்ளே அந்தச் சிறு பெண்ணின் முகத்தை அவன் பார்த்தானோ என்னமோ தெரியாது.

"ஐயா! அப்புறம் சொல்லுங்கள்" என்று பார்த்திபேந்திரன் கேட்டதும் கரிகாலன் இந்த உலகத்துக்கு வந்து கதையைத் தொடர்ந்தான்.

"பாட்டியிடம் ஓடம் விட்டு விளையாடியதைப் பற்றி என் தங்கை குந்தவை தான் சொன்னாள். அதைக் கேட்ட பிறகு மாதேவடிகள், "என் கண்ணே! இந்தப் பெண்ணைப் பார்த்தாயா? எவ்வளவு சூடிகையாயிருக்கிறாள்? இவர்கள் பாண்டிய தேசத்திலிருந்து நம்முடைய ஈசான சிவபட்டர் வீட்டுக்கு வந்திருக்கிறார்கள். கொஞ்ச நாளைக்கு இங்கே இருப்பார்கள். இந்தப் பெண்ணின் பெயர் நந்தினி. இவளையும் சில சமயம் உங்கள் விளையாட்டுக்களில் சேர்த்துக் கொள்ளுங்கள். இவள் உனக்கு நல்ல தோழியாயிருப்பாள்" என்றார். ஆனால் என் தங்கைக்கு இது பிடிக்கவில்லையென்பதை நான் அறிந்து கொண்டேன். நாங்கள் மூவரும் அங்கிருந்து அரண்மனைக்குச் சென்ற போது குந்தவை, 'அண்ணா! அங்கே ஒரு பெண் நின்றாளே? எவ்வளவு அவலட்சணமாயிருந்தாள் பார்த்தாயா? அவளுடைய முகம் ஏன் அப்படிக் கோட்டான் முகம் மாதிரி இருக்கிறது? அவளுடன் நான் விளையாட வேண்டும் என்கிறாரே பாட்டி? அவள் முகத்தைப் பார்த்தால் என்னால் சிரிக்காமலிருக்கவே முடியாதே! என்ன செய்வது?" என்றாள். இதைக் கேட்டதும் எனக்கு ஒரு முக்கியமான உண்மை தெரிய வந்தது. அதாவது பெண்கள் பிறக்கும் போதே பொறாமையுடன் பிறக்கிறார்கள் என்பது தான். ஒரு பெண் எவ்வளவு அழகுடையவளாயிருந்தாலும் இன்னொரு பெண் அழகாயிருப்பதைக் காணச் சகிப்பதில்லை.

"எங்கள் குலத்தில் பிறந்த பெண்களுக்குள்ளே என் சகோதரி சௌந்தரியம் மிக்கவள் என்பது பிரசித்தமானது. அவளுக்கும் இன்னொரு பெண் அழகாயிருப்பதைக் கண்டு பொறுக்கவில்லை. இல்லாவிட்டால் அந்தப் பெண்ணைக் குறித்து ஏன் அப்படிச் சொல்ல வேண்டும்? நான் என் சகோதரியை இலேசில் விடவில்லை. அவளுக்குக் கோபம் உண்டாக்குவதற்காகவே அந்த இன்னொரு பெண் அழகாய்த்தான் இருக்கிறாள் என்று வற்புறுத்திச் சொன்னேன். இருவரும் அடிக்கடி இதைப் பற்றி விவாதம் செய்து சண்டை பிடித்தோம். எங்கள் சகோதரன் அருள்மொழியோ இந்தச் சண்டையின் காரணத்தை அறியாமல் திகைத்தான். பிறகு சில நாளைக்கெல்லாம் பாண்டிய நாட்டு யுத்தத்துக்குச் சென்ற என் தந்தையோடு நானும் புறப்பட்டுச் சென்றேன். பாண்டிய சைன்யத்தையும் பாண்டியர்களுக்கு உதவியாக இலங்கை அரசன் அனுப்பிய சைன்யத்தையும் பல இடங்களில் முறியடித்தோம். கடைசியில் வீரபாண்டியன் ஒடி ஒளிந்து கொண்டானா அல்லது போர்க்களத்தில் மடிந்தானா என்பது அச்சமயம் தெரியவில்லை. வீரபாண்டியன் மறைந்ததும் பாண்டிய சைன்யத்துக்கு உதவியாக வந்த இலங்கை வீரர்கள் பின்வாங்கி ஓடினார்கள். அவர்களைத் துரத்திக் கொண்டு நாங்கள் சேதுக்கரை வரையில் சென்றோம். இறந்தவர்கள் போக மற்றவர்கள் கப்பலேறித் தப்பித்துச் சென்றார்கள். அடிக்கடி பாண்டியர்களுக்கு உதவியாகப் படைகள் அனுப்பித் தொல்லைப்படுத்தும் இலங்கை மன்னர்களுக்கு என் தந்தை புத்தி கற்பிக்க விரும்பினார். கொடும்பாளூர்ச் சிறிய வேளாரின் தலைமையில் ஒரு பெரிய படையை இலங்கைக்கு அனுப்புவதென்று தீர்மானித்தார்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## மானும் ஒட்டகமும்



பாலைவனத்திலிருந்து காட்டைச் சுற்றிப் பார்க்க வந்தது ஒட்டகம்.

"ஏய், நில்லு. உன் பேர் என்ன?" என்று அதிகாரமாகக் கேட்டது.

"நான்தான் மான்!"

"ஓ! நீ வெறும் மான் அல்ல. கிளை மான்" என்று சிரித்தது ஒட்டகம்.

"எதுக்கு இப்படிச் சிரிக்கிறே?"

"உன் தலையில் மரம், கிளைகள் எல்லாம் இருக்கே. பூ, பிஞ்சு எப்ப வரும்?" என்று கேட்டு மீண்டும் சிரித்தது ஒட்டகம்.

"ஒவ்வொரு விலங்கும் ஒவ்வொரு விதம். நீ ஒட்டகம். நான் மான். எனக்குக் கொம்பு முளைக்கும்" என்று நிதானமாகப் பதில் சொன்னது மான்.

"நீ சொல்வதெல்லாம் சரிதான். ஆனால் எனக்குக் கொம்பு இல்லையே" என்ற ஒட்டகம் மானுடன் சேர்ந்து நடந்தது.

அப்போது ஒரு யானை வேகமாகக் கடந்து சென்றது.

"அது யார்? மூக்கு ஏன் சீனப் பெருஞ்சுவர் மாதிரி நீண்டிருக்கு?" என்று மீண்டும் தன் கேள்வியைக் கேட்க ஆரம்பித்தது ஒட்டகம்.

"அது யானை. காட்டிலேயே மிகப் பெரிய விலங்கு" என்றது மான்.

"இந்தக் காட்டில் யாரைப் பார்த்தாலும் விநோதமா இருக்கு. எனக்குச் சிரிப்பா வருது" என்ற ஒட்டகம் அடுத்து யாரைக் கிண்டல் செய்யலாம் என்ற ஆர்வத்தில் நடந்தது.

திடீரென்று ஒட்டகத்தின் முகம் பிரகாசமானது. வேகமாக நடந்தது.

"காட்டிலேயே மிகச் சுமாரான விலங்கு இது தான் போலிருக்கு. அகல வாய், சின்னக் காது, பெரிய மூக்குன்னு எப்படி இருக்குன்னு பாரு. சரி, இதோட பேரை நான் தெரிஞ்சுக்கலாமா?" என்று மீண்டும் சிரித்தது ஒட்டகம்.

"ஆமாம் ஆமாம். நீ கண்டிப்பாகத் தெரிந்து கொள்ளத்தான் வேணும்" என்று மானும் சிரித்தது.

"பேரைச் சொல்லிட்டுச் சிரித்தால் நல்லா இருக்கும்"

"ஒட்டகம்" என்று மான் சொன்னது.

"என் பெயரைக் கேட்கவில்லை, அது பேரைச் சொல்லச் சொன்னேன் நான்" என்று ஒட்டகம் கேட்டது.

"அது பேரும் ஒட்டகம் தான்"

"இந்த விலங்குக்கு என் பெயரை வைக்க எவ்வளவு தைரியம் உங்களுக்கு எல்லாம்?" என்று கோபப்பட்டது ஒட்டகம். "அதுக்கு உன் பெயரை வைக்கலை. அதுவே நீதான்"

"என்ன, உளறுகிறாய் மான்?"

"இது கண்ணாடி. மனிதர்கள் ஆராய்ச்சிக்காக வைத்து விட்டுச் சென்றிருக்கிறார்கள். நீ இதுவரை கண்ணாடி பார்த்ததில்லை போலிருக்கு" என்று விளக்கம் அளித்தது மான்.

"நான் நம்ப மாட்டேன்"

"நீ சிரித்தால் அதுவும் சிரிக்கும். நீ தலை ஆட்டினால் அதுவும் ஆட்டும். செய்து பார்" என்று சொல்லிவிட்டுச் சற்றுத் தள்ளி நின்றது மான்.

ஒட்டகம் தலையை ஆட்டியது. வேகமாக மூச்சு விட்டது. ஈ என்று பல்லைக் காட்டியது.

"அட, நான்தான்! சே, என்னையே நான் இழிவாகப் பேசிவிட்டேனே. சரி, நான் உன்னைக் கிண்டல் செய்த போது, நீ ஏன் என்னைக் கிண்டல் செய்யவில்லை?" என்று பரிதாபமாகக் கேட்டது ஒட்டகம்.

"ஒருவரின் உருவத்தைப் பார்த்துக் கிண்டல் செய்வதற்கு என்ன இருக்கு? யாரையும் அழகு என்றோ, அசிங்கம் என்றோ நான் நினைக்கவே மாட்டேன். ஒவ்வொரு படைப்பையும் அப்படியே ஏற்றுக் கொள்வேன். சரி, நான் வருகிறேன்" என்று கிளம்பியது மான்.

"என்னை மன்னித்து விடு. இனிமேல் யாரையும் கிண்டல் செய்ய மாட்டேன்" என்று வருந்தியது ஒட்டகம். "நண்பர்களுக்குள் எதுக்கு மன்னிப்பு?" என்றுமான் வேகமாக ஓடி மறைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் எதை உறுதியாக நினைக்கிறானோ அதுவாகவே அவன் மாறிவிடுவான்
– புனித பைபிள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சிவனுக்கு திறவாத் திருக்கதவு புத்தருக்கு அடையா நெடுங்கதவு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தமிழ் மாணவர்களுக்கு அன்பு வணக்கம்.

இன்னும் சிறிது காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் புத்தர் பெருமான் குடியிருப்பார் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

அதற்கான ஒத்திகைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

ஆம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் படிக்கின்ற பௌத்த சிங்கள மாணவர்கள் வழிபடுவதற்காக போயா தினங்களில் புத்தர் சிலையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பிரதான நுழைவாயில் ஊடாக கொண்டு செல்லுகின்றனர். இது ஏன் என்பது தெரியவில்லை.

யாழ்ப்பாணம் ஆரியகுளத்தருகில் இருக்கக்கூடிய நாகவிகாரையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கற்கின்ற பௌத்த சிங்கள மாணவர்கள் வழிபாடு செய்ய முடியும்.

ஆனால் அவர்கள் அதைச் செய்யாமல், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் புத்தர் சிலையை வைத்து வழிபடுவது, பௌத்த கொடிகளைப் பறக்க விடுவது என அடாத்து நடவடிக்கைகளைச் செய்கின்றனர்.

உண்மையில் இந்து மாணவர்களின் வழிபாட்டுக்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எந்தக் கோயிலையும் பல்கலைக்கழக நிர்வாகமோ அன்றி பல்கலைக்கழக மாணவர்களோ நிர்மாணிக்கவில்லை.

இதை நாம் கூறும்போது பரமேஸ்வரன் ஆலயம்... என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம். அவ்வாறு கேட்டால், அது அறியாமையின் பாற்பட்டதாகும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் இருக்கின்ற பரமேஸ்வரன் ஆலயம் சேர் பொன்.இராமநாதப் பெருவள்ளலால் அமைக்கப்பட்டு அவரின் மனைவி சீமாட்டி லீலாவதி அவர்களால் புனரமைக்கப்பட்டது.

ஆக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக மாற்றப்பட்ட திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி இருந்தபோது அமையப்பெற்றதே குறித்த பரமேஸ்வரன் கோயிலாகும்.

அந்த ஆலயம் அமையப் பெற்றிருக்கும் காணி ஆலயத்துக்குச் சொந்தமானது. அந்த ஆலயம் பொதுமக்களின் வழிபாட்டுக்குரியது.

அங்கு பொதுமக்கள் சென்று எந்நேரமும் வழிபடுவதை எவரும் தடுக்க முடியாது.

இதற்காகவே சேர் பொன்.இராமநாதன் வீதியை நுழைவாயிலாகக் கொண்டு, ஆலயத்தின் நேரெதிரே நுழைவாயில் அமைக்கப்பட்டிருந்தது.

இருந்தும் பொதுமக்கள் பரமேஸ்வரன் ஆலயத்துக்கு வருவதை தடுப்பதற்காக திட்டமிட்டு புதிதாக அமைக்கப்பட்டதே, இப்போது அந்த இடத்தில் இருக்கக்கூடிய திறவாத திருக்கதவைக் கொண்ட வாயிலாகும்.

முன்பெல்லாம் சேர் பொன்.இராமநாதன் வீதியால் பயணிக்கின்றவர்கள், பரமேஸ்வரனை வீதியில் நின்று வழிபடுவர். அந்த இடத்தில் கற்பூரம் ஏற்றுவர். பூக்களை அந்த நுழைவாயிலில் இருந்த இரும்புக் கதவில் சாத்துவர்.

ஆனால் இன்று அவையெல்லாம் இல்லாமல் போயிற்று.

இனி புத்தர் சிலை வைப்பதற்கான இட ஒதுக்கீடு மட்டுமே பாக்கியாக இருக்கிறது.

இந்த நிலைமை சிங்கள – தமிழ் மாணவர்களிடையே முரண்பாட்டை ஏற்படுத்தி, அவர்களுக்கிடையே மோதலை ஏற்படுத்தப் போகிறதே என்ற ஏக்கம் மட்டுமே இப்போது நம்மிடம் உண்டு.

என்ன செய்வது. சைவப் பெருவள்ளல் சேர் பொன்.இராமநாதன் பிரபு ஈந்தளித்த நிலத்தில் – பார்வதி பரமேஸ்வரன் வீற்றிருக்கும் தலத்தில் இன்னொரு வழிபாட்டுத் தலம் அமையுமாயின் அதைவிட்ட கொடுமை வேறு எதுவுமாக இருக்க முடியாது.

## இந்த ஆண்டின் இறுதியில் அனைத்துப் பொருட்களுக்குமான இறக்குமதி தடைகள் நீக்கப்படும்

இந்த ஆண்டின் இறுதியில் ஏனைய அனைத்துப் பொருட்களுக்குமான இறக்குமதித் தடைகள் நீக்கப்படும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாரசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அரசாங்கத்தின் நடவடிக்கைகள் காரணமாக எதிர்க்கட்சி தலைவர் திகைத்து காணப்படுகின்றார் என்பது வெளிப்படையாக தெரிகின்றது.

காரணம் இந்த நாடு முடிந்துவிட்டது, இந்த நாடு அழிந்து போக போகின்றது என்று நினைத்து அவர் மிகுந்த சந்தோசப்பட்டார்.

ஆனால் அவர் எதிர்பார்த்த வகையில் இந்த நாடு வங்குரோத்து அடையாததன் காரணமாக அவர் தற்போது திகைத்து நிற்கின்றார்.

ஜனாதிபதி ஆட்சிக்கு வரும் போது இந்த நாட்டின் மத்திய வங்கியிடம் இருபது மில்லியன் டொலர்கள் மட்டுமே இருந்தன. தற்போது அது 3700 மில்லியன் டொலர்களாக மாறியுள்ளது.

300 பொருட்கள் நாட்டிற்கு இறக்குமதி செய்ய தடை விதிக்கப்பட்டது. உரப்பிரச்சினை இருந்தது. இந்த ஆண்டின் இறுதியில் மற்ற அனைத்து பொருட்களுக்கும் இறக்குமதி தடை நீக்கப்படும்.

வெளிநாட்டு-வர்த்தகத்தில் ஏற்றுமதி வருவாயாக மாதத்திற்கு ஒரு பில்லியன் டொலர்களுக்கும் அதிக வருமானம் ஈட்டுகின்றோம்.

இந்த நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதில் நாட்டு மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

சர்வதேச சமூகத்தில் தனியாக கடன் பிரச்சினைகளை தீர்க்க முடியாமல் தவித்த நாம் தற்போது சர்வதேச சமூகத்தின் ஆதரவை பெற்று வருகின்றோம்.

நமது நாட்டின் மீதான நம்பிக்கை உலக அளவில் உறுதி செய்யப்பட்டுள்ளது. இலங்கையில் பாரிய முதலீட்டு வலயத்தை உருவாக்க தாய்லாந்து செயற்பட்டு வருகின்றது. அவர்கள் இந்த நாட்டில் தங்கள் தயாரிப்புகளை தயாரிக்க தயாராகி வருகின்றனர்.

உலகப் பொருளாதாரத்தில் 30 வீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் RCEP ஒத்துழைப்புடன் இலங்கையையும் இணைத்துக் கொள்ளுமாறு ஜனாதிபதி தனது ஜப்பானுக்கான விஜயத்தின் போது கோரிக்கை விடுத்தார்.

அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, ஜப்பான், தாய்லாந்து, வியட்நாம், சீனா உள்ளிட்ட 15 நாடுகள் இந்தக் குழுவில் அங்கத்துவம் வகிக்கின்றன.

இதற்கமைவாக உலகப் பொருளாதாரத்தில் 30 சதவீத சந்தைக்குள் நுழையும் திறன் எம்மிடம் இருக்கின்றது" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## துன்னாலை வடக்கில் மோட்டார் சைக்கிள் திருட்டு

திருத்த வேலைக்காக வீடொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று நேற்று புதன்கிழமை அதிகாலை திருடிச் செல்லப்பட்டுள்ளதாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

துன்னாலை வடக்கு, போதராமடம் பகுதியில் உள்ள வீட்டில் மோட்டார் சைக்கிள் திருத்தும் தொழிலை ஒருவர் மேற்கொண்டு வருகின்றார். அவரிடம் புலோலிப் பகுதியை சேர்ந்த நபர் ஒருவர் மோட்டார் சைக்கிளை திருத்துவதற்காக ஒப்படைத்துள்ளார்.

வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் நேற்று புதன்கிழமை அதிகாலை 2.00 மணியளவில் திருடிச் செல்லப்பட்டுள்ளது. (ம-7,60)

## கைதிகளின் எண்ணிக்கை 200 மடங்காக அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் பல்வேறு குற்றச்சாட்டுகளுக்காக சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்படும் கைதிகளின் எண்ணிக்கை,வேகமாக அதிகரித்து வருவதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து சிறைச்சாலைகளிலும் 13,241 கைதிகளையே தடுத்து வைப்பதற்கான இடவசதி உள்ளது.

எனினும், தற்போது சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் எண்ணிக்கை 29,000 ஐ அண்மித்துள்ளதாக சிறைச்சாலை திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இது 200% அதிகரிப்பாகும்.

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **கிளிநொச்சி பிரதேசத்தில்** அம்பகாமம், அம்பகாமம் மொபிட்டல் கோபுரம், டயலொக் கோபுரம்-ஒலுமடு, கற்கிடங்கு, நீதிபுரம், ஒலுமடு, பழம்வேலி வயல் வீதி, பெரிய புளியங்குளம் (துட்சை அடம்பன்), புலிமெச்சினாதிகுளம், புதிய நகர் (துட்சை அடம்பன்), தட்சை அடம்பன் (கரிப்பட்டமுறிப்பு) ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## கொக்குவிலில் முதியவர் ஒருவரின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாசகம் பெற்றுவந்த முதியவர் ஒருவர் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் உள்ள திறந்த அறை ஒன்றில் இருந்து நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர் கொக்குவில் பகுதியைச் சேர்ந்த முத்துத்துரை சித்திராந்தன் (வயது 70) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சொந்த வீடு இன்றி நீண்ட காலமாக யாசகம் பெற்று வந்த நிலையில் இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மரணம் குறித்து மரண விசாரணை மேற்கொண்ட திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார், உடற்கூற்று பரிசோதனைக்காக சடலத்தை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அவரது உறவினர்கள் கொழும்பில் வசித்து வருகின்ற நிலையில், இது குறித்து அவர்களுக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. (ம-7,33,104)

## போதைப்பொருள் கடத்தல் முயற்சி

### இஸ்லாமாபாத்தில் இலங்கையர் கைது

(கொழும்பு)

சுமார் 10 கிலோ நிறையுடைய போதைப்பொருளை, கட்டாருக்கு கடத்த முயற்சித்த இலங்கையர் ஒருவர் ,பாகிஸ்தானின் இஸ்லாமாபாத் சர்வதேச விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளதாக அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

டோஹா நோக்கி புறப்படவிருந்த விமானத்தின் பயணிகள் சோதனையிடப்பட்ட போது, குறித்த நபரிடமிருந்து இந்த போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

அதன்போது, சந்தேக நபரின் பயணப் பையிலிருந்து 10 கிலோகிராம் 294 கிராம் நிறையுடைய ஹெராயின் போதைப் பொருள் மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரான இலங்கையர் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக பாகிஸ்தானின் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.(ம-7)

## கற்கைநெறிக்கான விண்ணப்பம் கோரல்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தால் நடாத்தப்படும் கல்விமானி(ஆரம்பக் கல்வி - B.Ed Primary) கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எதிர்வரும் 15.08.2023 க்கு முன்னர் இணையவழி ஊடாக (www.ou.ac.lk) விண்ணப்பத்தினைப் பெற்று விண்ணப்பிக்கலாமென யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும் விஜயன் வருகையிலிருந்து

## பொலநறுவை யுகம் முடியும் வரை- பகுதி I

32


கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.





பொலநறுவையிலிருந்து இலங்கையை ஆட்சி செய்து வந்த முதலாம் விஜயபாகு அம்பகமுவ என்னுமிடத்தில் ஓர் கல்வெட்டைப் பொறித்துள்ளான். மேலும் பாணகடுவ எனும் இடத்தில் செப்பேடு ஒன்றையும் எழுதினான். இவற்றில் சிவனொளிபாதமலைக்கு யாத்திரை மேற்கொள்ளும் பக்தர்களின் வசதி கருதி அவர்கள் தங்குவதற்கு அம்பலங்கள் கட்டுவித்ததாகவும் அவற்றின் மூலம் உணவு, குடிநீர் வழங்குவதற்கு ஏற்பாடு செய்ததாகவும் கல்வெட்டு கூறுகிறது. விஜயபாகுவின் இந்திய மனைவியான திலோக சுந்தரி சிவ வழிபாட்டில் ஈடுபாடுடைய இந்து இளவரசியாவாள்.

திலோக சுந்தரியின் வேண்டுகோளின்படி விஜயபாகு சிவனொளிபாதமலை உச்சியில் ஓர் மண்டபத்தைக் கட்டினான் என கல்வெட்டு மூலம் அறியக் கூடியதாக உள்ளது. இங்கிருந்து திலோக சுந்தரி சிவத்தொண்டு புரிந்தாள் எனவும் தெரிகிறது. விஜயபாகு மூலம் திலோக சுந்தரிக்குப் பிறந்த 5 பெண்பிள்ளைகளான சுபத்ரா, சுமித்திரா, லோகநாதா, ரத்னாவள்ளி, ரூபாவதி ஆகியோரில் நான்காவது பெண்ணான ரத்னாவள்ளியின் மகனே மகாபராக்கிரமபாகுவாகும். சிங்கள மன்னர்களில் அதிகமான இந்துக் கோயில்களை புனர்நிர்மாணம் செய்தவனும் இம்மன்னனே என்பதும் குறிப்பிடத்தக்கது.

### விஜயபாகு I (1055-1110) வெளியிடப்பட்ட தங்ககஹவனு நாணயம்

விஜயபாகு I மன்னன் வெளியிடப்பட்ட தங்க கஹவனு நாணயம் (1055 - 1110)



முன்பக்கம் - எழுந்து நிற்கும் அரசன்
பின்பக்கம் –உட்கார்ந்திருக்கும் அரசன்
நாகரி எழுத்தில் அவன் பெயர்

சோழர் ஆக்கிரமிப்பில் (985-1014) இலங்கையை விடுவித்த பின்னர் விஜயபாகு I (1055-1110) மன்னனால் வெளியிடப்பட்ட தங்ககஹவனு நாணயங்கள் படத்தில் காட்டப்பட்டுள்ளன. நாணயத்தின் முன்பக்கம் நிற்கும் ராஜாவின் பாரம்பரிய இலங்கை மோசா வடிவமைப்பு உள்ளது. சாதாரண தலையானது மையக்கண்ணுடன் ஒரு ஒழுங்கற்ற நீள் வட்டத்தைக் கொண்டுள்ளது, வலது பக்கம் ஒரு செங்குத்து கோடாக இருக்கும், அதில் இருந்து மூக்கு, வாய் மற்றும் கன்னம் ஆகியவற்றைக் குறிக்கும் மூன்று கிடை மட்ட கீறுகள் உள்ளன.

பின்புறமும் மேற்புறமும் மண்டை ஓட்டின் கிரீடத்தில் வெளிப்புறமாக வீங்கிய வளைந்த கோட்டால் உருவாகின்றன. முன் கை கூர்மையாக கீழே வளைந்திருக்கும் கை தொங்கும் விளக்கைப் பிடிக்கிறது. இந்நாணயங்களும் சோழர் காலத்து தங்க கஹவனு நாணயம் போன்ற உருவமைப்பையே கொண்டுள்ளது.

### முதலாம் ஜெயபாகு (1110-1111)

முதலாம் ஜெயபாகு முதலாம் விஜயபாகுவின் சகோதரர். அவரது ஆட்சி ஒரு வருடம் (1110 முதல் 1111 வரை) மட்டுமே நீடித்தது. இவர் முதலாம் விக்ரமபாகுவால் போரில் தோற்கடிக்கப்பட்டார். மன்னன் மகா (முதலாம்) விஜயபாகுவின் மரணத்துடன் அப்போது ருகுணுவில் இருந்த அவனது மகன் விக்ரமபாகுவுக்குத் தெரிவிக்காமல், பொலநறுவை பிரபுவும் சங்கமும் சதி செய்து அரசனின் சகோதரன் ஜெயபாகுவை அரியணையில் அமர்த்தினார்கள். தளபதியான ஜெயபாகு தனது சகோதரர்களுடன் இராணுவத்தை எடுத்துக் கொண்டு விக்ரமபாகுவைக் கைது செய்வதற்காக ருகுணு நாட்டின் மீது படையெடுத்தார். எனினும், தனது தந்தையின் போர் குணம் கொண்ட விக்ரமபாகு அவர்களை வென்று பொலநறுவையை கைப்பற்றி பொலநறுவை இராச்சியத்தின் மூன்றாவது அரசராக முடிசூடினார்.

### விக்ரமபாகு I (1111-1131)

விக்ரமபாகு I (1111-1131) இவர் முதலாம் விஜயபாகு மன்னன் மற்றும் கலிங்க இளவரசி திலோக சுந்தரியின் மகனாவார். முதலாம் ஜெயபாகு மன்னன் இறந்த பிறகு முதலாம் விக்ரமபாகு ருகுணுவில் இருந்த போது முதலாம் விக்ரமபாகுவின் அத்தை மற்றும் முதலாம் விஜயபாகுவின் சகோதரி மித்தாதேவி ஆகியோர் தனது மகனுக்கு அரியணையைக் கொடுக்கச் செய்த சதியால் பல மோதல்கள் எழுந்தன. இருப்பினும் விக்ரமபாகு தனது அத்தை மற்றும் அவரது மகன்கள் நாட்டை விட்டு வெளியேறிய போது அரியணைக்கு சரியான வாரிசாக வெற்றி பெற்றார்.

இவனது ஆட்சிக் காலத்தில் வீரதேவன் என்ற அந்நியன் இலங்கை மீது படையெடுத்ததால் அவனுடன் போரிட நேர்ந்தது. பின்னர் ஜெயபாகு மற்றும் அவரது சகோதரர்கள் மற்றும் விக்ரமபாகு ஆகியோர் வெவ்வேறு மாகாணங்களை தனித் தனியாக ஆட்சி செய்தனர். ஆனால் அவர்களின் ஆட்சி கடுமையாக இருந்தது.

அவர்கள் நாட்டு மக்களுக்கு வரி விதித்தனர். ஆரம்பத்தில் சங்கங்கள் தனக்கு துரோகம் செய்ததால் அவர்களை கோவில்களில் இருந்து வெளியேற்றிய விக்ரமபாகு, அந்த கோவில்களை இராணுவ முகாம்களாக மாற்றினார். ஆட்சியாளர்களும் அவர்களின் அதிகாரிகளும் குடிமக்களின் சொத்துக்களை சூறையாடினர். அது உள்நாட்டுக் குழப்பங்களின் சகாப்தமாக இருந்தது. எந்த வளர்ச்சியும் செய்யப்படவில்லை.

### இரண்டாம் கஜபாகு (1131 -1153)

இரண்டாம் கஜபாகு 1131 முதல் 1153 வரை ரஜரட்டையை ஆட்சி செய்தான். இவரது தந்தை முதலாம் விக்ரமபாகு ஆவார். முதலாம் பராக்கிரமபாகு, இரண்டாம் கஜபாகுவைத் தோற்கடித்து ஆட்சிக்கு வந்தான்.

1 ஆம் விஜயபாகுவைத் தொடர்ந்து முடிசூடிய ஜெயபாகு (கி.பி.1110- 1111) மிகக் குறுகிய காலமே ஆட்சி புரிந்தான். இவனுக்குப் பின் வந்த விக்கிரமபாகு (1111-1131), 2 ஆம் கஜபாகு (1131-1153) ஆகியோர் சைவ மதச் சார்புடையோராகவே ஆட்சி புரிந்துள்ளனர்.

குறிப்பாக விக்கிரமபாகுவிற்கு சிங்கள பௌத்த மன்னர்களுக்கு நடைபெறும் முடிசூட்டு விழா நடைபெறாமை மற்றும சூளவம்சத்திலே விக்கிமபாகு இந்து மன்னனாகவே ஆட்சி செய்தான் என்ற குறிப்பு இம்மன்னுடைய 21 ஆண்டு கால (கி.பி.1111- 1131) ஆட்சியில் இந்துமதம் அடைந்த உச்ச வளர்ச்சியை எடுத்துக் காட்டுகிறது. மேலும் விக்கிரமபாகு இந்து மதத்திற்கு அளித்த ஆதரவை குருணாகல் மாவட்டத்திலுள்ள மாகல என்ற இடத்தில் கிடைத்த கல்வெட்டுக்களும் உறுதிப்படுத்துகின்றன.

விஜயபாகுவிற்கு பின் வந்த பொலநறுவை சிங்கள அரசர்களில் அதி முக்கியத்துவம் வாய்ந்தவனாக கருதப்படுபவன் முதலாம் பராக்கிரமபாகு ஆவார். நாட்டின் விவசாயத்திற்கு முன்னுரிமை கொடுத்த மன்னனாக அவன் புகழப்படுகின்றார். பொலநறுவை இராசதானி காலத்தில் வெளிநாட்டுத் தொடர்புகள் வலுப்பெற்றிருந்தன. முதலாம் பராக்கிரமபாகு காலத்தில் இலங்கை நெல் உற்பத்தியில் தன்னிறைவு கண்டிருந்ததாக வரலாறு கூறுகின்றது. அத்துடன் நெல்லானது இந்தியாவிற்கும் தென்னாசிய நாடுகள் சிலவற்றுக்கும் ஏற்றுமதியும் செய்யப்பட்டுள்ளது.

### முதலாம் பராக்கிரமபாகு (1153-1186)

முதலாம் பராக்கிரமபாகு அல்லது மகாபராக்கிரமபாகு என்பவன் இலங்கையின் பொலநறுவை இராச்சியத்தை கி.பி 1153 முதல் 1186 வரை ஆட்சி புரிந்த மன்னர் ஆவார். அரசர் மானாபரணவுக்கும் அரசி ரத்னாவலிக்கும் 1123 ஆம் ஆண்டு கேகாலைப் பகுதியில் புங்கம எனும் கிராமத்தில் பிறந்தார். இவரது பாட்டனார் இலங்கையில் குடி புகுந்த பாண்டிய இளவரசன் ஆவார். இலங்கையின் முக்கிய மூன்று இராச்சியங்களையும் பராக்கிரமபாகு ஒன்றிணைத்தார். அக்காலத்திலே இவ்விராச்சியத்தின் தலை நகரமாக விளங்கியது பொலநறுவை ஆகும்.

தன்னுடைய தலைநகரை அழகாகப் பேணல், மேற்பார்வை செய்தல் போன்ற பணிகளில் ஈடுபட்டிருந்தார். இவரின் காலத்தில் நாட்டில் விரிவாக நிர்மாணிக்கப்பட்ட நீர்ப்பாசனத் தொகுதிகள் காணப்பட்டன. நாட்டின் இராணுவப் படைகள் மறுசீரமைக்கப்பட்டன, பௌத்தம் வளர்க்கப்பட்டது. கலைகளும் வளர்க்கப்பட்டன.

தென்னிந்தியாவுடனும் மியான்மாருடனும் பராக்கிரமபாகு இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார். இவரின் காலத்தில் இலங்கை தெற்காசியாவின் தானியக் களஞ்சியம் என அழைக்கப்பட்டது. இவரே பராக்கிரமசமுத்திரத்தையும் கட்டுவித்தார். "வானிலிருந்து விழும் ஒரு துளி நீரையும் விவசாயத்திற்குப் பயன்படுத்தாது வீணாகக் கடலைச் சென்றடைய விடமாட்டேன்" என்பது பராக்கிரமபாகுவின் புகழ் மிக்க கூற்றுக்களில் ஒன்றாகும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னாரில்...

ளது.

கரை ஒதுங்கிய சடலத்தில் நீல நிற சாரம் அரைக் காற்சட்டை மற்றும் கறுப்பு நிற ரீ-ஷேர்ட் அணிந்த நிலையில் காணப்படுகின்றது.

மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,285)

## காங்கேசன்துறை...

கையில்,

ஆரம்பத்தில் காங்கேசன்துறை மற்றும் காரைக்கால் இடையே கப்பல் சேவை ஆரம்பிக்க திட்டமிட்டிருந்த நிலையில் தற்போது கங்கேசன்துறை - நாகபட்டினம் இடையே குறித்த பயணப் பாதை மாற்றப்பட்டமையினாலேயே இத்தாமதம் ஏற்பட்டது.

குறித்த கப்பல் சேவையை விரைவில் ஆரம்பிப்பதற்காக தமிழ்நாடு நாகபட்டினத்தில் பயணிகள் இறங்குமிடம், சுங்கம் போன்றவை அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

அப்பணிகள் நிறைவடைந்தமையுடன் கப்பல் சேவையினை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளோம். கப்பல்சேவை தொடர்பிலான நல்லதொரு செய்தியினை மக்களுக்கு விரைவில் அறிவிப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

மெகா பவர்
திகதி 02/08/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1542
வெற்றி எழுத்து சுப்பர் இலக்கம் வெற்றி இலக்கங்கள்
F 22 08 72 74 79
47541

தன நிதானய
திகதி - 2023.08.02
சீட்டிழுப்பு இலக்கம் - 1224
T 17 45 60 82 T
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
25916
தொலைபேசி : 011 468 7000 / 011 232 4324

லக்கி 7
திகதி 02.08.2023
சீட்டிழுப்பு இலக்கம் 020
L7 இலக்கம் 2 7
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள்
மேஷம் 5 6 5 5 5 4

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3436
சீட்டிழுப்பு திகதி 02.08.2023
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
C 02 06 45 79
C 31447
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.08.02
சீட்டிழுப்பு இலக்கம் 503
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள்
ரிஷபம் 04 10 12 54 ரிஷபம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/08/02
சீட்டிழுப்பு இலக்கம் 5194
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
V 7 1 4 4 0 4
தேசிய லொத்தர் சபை

## 30 பில்லியன்...

கப்பட்டுள்ளது.

மேலும் சுகாதார அமைச்சின் ஏற்பாட்டின் கீழ் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ம-7)

## காலையில்...

தர்களின் அலுவலக நேரம் பொருந்தும் எனவும், வருகையை கைரேகை இயந்திரம் மூலம் உறுதிப்படுத்த வேண்டும் எனவும் சுற்றறிக்கை மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாரத்தின் திங்கள் மற்றும் புதன் கிழமைகளில் அந்த அதிகாரிகள் பணியிடத்தில் தங்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வாரத்தில் எஞ்சிய மூன்று நாட்களுக்கு களத்திற்குச் செல்வதற்கு முன், அவர் தனது அலுவலகத்தில் அறிக்கை செய்து முறையான புறப்பாடு ஆவணத்தில் பெயரிடப்பட்ட பணியாளர், அதிகாரியின் ஒப்புதலைப் பெற வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் உரிய அனுமதிகளை வழங்குவதற்காக நியமிக்கப்பட்டுள்ள இந்த ஊழியர் உத்தியோகத்தர்களுக்கு மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்கள் அங்கீகாரம் வழங்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மிகவும் அரிதான மற்றும் தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் மட்டுமே, கடமை விடுப்புக்கு முந்தைய நாளில் ஒப்புதல் அளிக்க முடியும் என்றும், அதற்கு நியாயமான காரணங்களை தெரிவிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் விடுப்புக்கான நியாயமான காரணங்களை முன்வைக்கும்போது வெளியேறும் ஆவணத்தைப் பயன்படுத்த வேண்டாம் என்றும், வெளியேறும் ஆவணம் முந்தைய திகதியில் மற்றும் அதற்கு மேல் ஒருபோதும் அங்கீகரிக்கப்படக்கூடாது என்றும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. (ம-7)

## உழவு இயந்திரம்...

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாயில் நேற்று முன்தினம் இரவு இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் கொழும்பைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞனே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் கொக்கிளாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,299)

## புதிய மருத்துவ...

த்து, சிறந்த சுகாதார சேவையையும், பொது நலனையும் உறுதி செய்ய முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சுகாதார சேவையை மேம்படுத்துவது மற்றும் சுகாதார சேவைக் கட்டமைப்பை பலப்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற பின்னாய்வுக் கூட்டத்தில் இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

அதேவேளை, மருந்து விநியோகம் மற்றும் ஆவணப்படுத்தல் முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டதுடன், இரண்டு வாரங்களுக்கு முன்னர் இடம்பெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம், மருந்து வகைகளை மருத்துவமனைகளுக்கு விநியோகிப்பது தொடர்பில் உடனடி தகவல் வழங்கும் வகையில் இணையவழி முறைமையை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டுமெனவும் ஜனாதிபதி இதன்போது வலியுறுத்தினார்.

அதேவேளை, தரமான மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கான எளிய மற்றும் வெளிப்படையான கொள்முதல்செயல் முறையை தயாரிப்பதற்காக திறைசேரி பிரதிச் செயலாளர் ஏ.கே.செனவிரத்ன தலைமையில் ஐவர் கொண்ட குழுவும் நியமிக்கப்பட்டது. (ம-7)

## கல்வியங்காட்டில்...

இடம்பெற்றுள்ளது.

இரு தரப்பினர் இடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடே மோதலுக்குக் காரணம் எனத் தெரிய வருகின்றது.

சம்பவ இடத்துக்கு வருகை தந்திருந்த பொலிஸார் நிலைமையினை சுமுகமாக்கினர். (ம-7)

## இறக்...

காட்டிலும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

எதுல்கோட்டை பகுதியில் உள்ள பிவிதுரு ஹெல உறுமய கட்சி காரியாலயத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது, வெளிநாட்டு கையிருப்பு பற்றாக்குறையால் கடந்த ஆண்டு இறக்குமதிகள் மீது தடை விதிக்கப்பட்டது. பொருளாதார பாதிப்பில் இருந்து மீண்டு விட்டோம். கைவசம் போதுமான அளவு டொலர் உள்ளது எனக் குறிப்பிட்டுக் கொண்டு இறக்குமதி மீதான தடைகளை அரசாங்கம் கட்டம் கட்டமாக தளர்த்தி வருகிறது.

வெளிநாட்டு கையிருப்பு பற்றாக் குறையால்தான் கடந்த எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளில் பாரிய நெருக்கடி தோற்றம் பெற்றது.

தூரநோக்கமற்ற வகையில் அரசாங்கம் தற்போது இறக்குமதிகள் மீதான தடைகளை நீக்குகிறது. இது கடந்த ஆண்டை காட்டிலும் எதிர்காலத்தில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்றார். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2168 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.08.02 தினம் புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள் 14 27 36 37 ஆங்கில எழுத்து R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,709,756.40
சுப்பர் போல் "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 26 30 40 48 C

சனிதா
திகதி 2023.08.02 வெற்றி வாரம் 4329 வர்ணம் ஊதா
வெற்றி இலக்கங்கள் 11 18 50 53 ஆங்கில எழுத்து R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,980,552.00
சனிதா "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 05 29 44 52 F
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு வாரம் 3880 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.08.02 தினம் புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள் 06 07 15 31 கன்னி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,036,608/-
ராசி அதிர்ஷ்டம் "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 02 18 25 55 ரிஷபம்

கப்ருக
திகதி 02.08.2023 வெற்றி வாரம் 1344 வர்ணம் வெளிர் நீலம்
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Q 29 66 72 74 75
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 423,624,494.20
கப்ருக "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 15 27 41 44 L
DLB தொலை பேசி 011-2 333 546-47 Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ஜயோதா Jayoda
திகதி 2023.08.02 வெற்றி வாரம் 1944 வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 03 08 36 57 H
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.45,213,095.20
ஜயோதா "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 05 19 29 45 L
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம் : 1994
வர்ணம் : றோஸ்
சீட்டிழுப்பு திகதி : 2023.08.02
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,829,064/-
வெற்றி இலக்கங்கள் 04 08 48 62 ஆங்கில எழுத்து C
அத கோடிபதி "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 11 20 32 69 A
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தலை...

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுஜன பெரமுனவை பிரிக்கும் வேலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கச்சிதமாக ஈடுபட்டு கொண்டு இருக்கின்றார்.

அடுத்துவரும் நாட்களில் வர்ணமயமான காட்சிகளை எதிர்பார்க்கலாம் ரணில் விக்கிரமசிங்கவையும் சஜித் பிரேமதாசவையும் இணைப்பதற்கான பேச்சுக்கள் இடம்பெறுகின்றன. எல்லாவற்றையும் ஊடகங்களுக்கு சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்றார்.

மேலும், சமஷ்டி என்பது வெறுமனே கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு மட்டும் உரித்தானது அல்ல. சமஷ்டி என்பது தனிவுடமை வாதம் அல்ல அது பொதுவுடமை வாதம் வடக்கு கிழக்கில் உள்ள அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளும் தமது இலக்காக சமஷ்டியைத் தான் கொண்டுள்ளனர். அதில் எந்த மாற்றுக் கருத்துக்களும் இல்லை என்றார்

மேலும்,எதிர்வரும் வெள்ளிக்கிழமை இலங்கைக்கான இந்திய உயரஸ்தானிகரை தமிழ் முற்போக்கு கூட்டணியின் தூதுக்குழு சந்திக்க இருக்கின்றோம். இதன் போது நான் ஏற்கனவே கூறியதைப் போன்று வடகிழக்கில் மட்டுமாவது மாகாண சபைத் தேர்தலை நடாத்துவதற்கு அழுத்தம் கொடுக்குமாறு நான் நிச்சயம் கூறுவேன்.

ரணில் விக்ரமசிங்கவிற்கு தேர்தல் என்றால் அலர்ஜி. உள்ளூராட்சி மன்ற தேர்தலையும் இல்லாத ஆக்கி விட்டார் மாகாண சபையும் இல்லை போகின்றதை பார்த்தால் பாராளுமன்ற தேர்தலையும் இல்லாமல் ஆக்குவார் போன்று தெரிகிறது.

ஜனாதிபதி தேர்தலை நடாத்தி வெற்றி பெறலாம் என அவர் நினைக்கின்றார், அதுவரை எந்த தேர்தலையும் நடாத்தி மக்களுடைய கருத்து வெளிப்பட்டு விடக்கூடாது என அவர் நினைக்கின்றார்.

வடக்கு கிழக்கில் தேர்தலை நடத்தினால் அவருக்கு பெரிய நஷ்டம் வரப்போவதில்லை, தென்னிலங்கையில் தேர்தலை நடத்தினால் தான் அவருக்கு எதிராக மக்கள் அணி திரண்டால் அவருடைய கனவு புஸ்வானம் ஆகிவிடும் என அவர் நினைக்கிறார் என்றார். (ம-7)

## ஜப்பான் திறன் பரீட்சைகளுக்கான திகதி அறிவிப்பு

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் (SLBFE) 2023 ஆம் ஆண்டுக்கான ஜப்பான் குறிப்பிட்ட திறன் வாய்ந்த வேலைகளுக்கான (SSW) திறன் பரீட்சைகளுக்கான திகதிகளை அறிவித்துள்ளது.

SLBFE இன் படி, திறன் சோதனைகள் ஒகஸ்ட் மற்றும் செப்டெம்பர் 2023 இல் நடைபெறுகிறது. சோதனைகளில் அடிப்படை மொழி சோதனைகள், தாதியர் தொழிலாளர்கள், உணவு சேவை தொழில் மற்றும் விவசாயம் ஆகியவை அடங்கும்.

விண்ணப்பதாரர்கள் இணையதளமான http://ac.prometric-jp.com/testlist/ssw/index.html மூலம் பதிவு செய்யுமாறு கோரப்பட்டுள்ளது. (ம-7)

## நாட்டை...

வெளிவரவில்லை. ஆனால், ஆளுங் கட்சியில் உள்ள ஒரு சிலர் முந்திக் கொண்டு மேடைகளில் ஏறி ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட விரும்புவாராயின் அவரை நிராகரிப்பதற்குக்காரணங்கள்எதுவும்இல்லை.

வீழ்ச்சியடைந்த எமது நாட்டை மீட்டெடுத்து வரும் ஒரு தலைவராக அவர் விளங்குகின்றார். இந்தநிலையில் ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பு வந்தவுடன் யார் வேட்பாளர் என்பதை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அறிவிக்கும். அதுவரை அனைவரும் பொறுமையாக இருக்க வேண்டும் என்றார். (ம-7)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (16550)
076 825 7716 (ஆகாஸ்)

கார் வாடகைக்கு
எரிபொருள், சாரதியுடன் (100Km) ஒரு நாளுக்கு 12,000/= (16595)
077 332 2433


WORK IN UK
WORK PERMITS
CONSTRUCTION WORKERS
5 YEAR WORK PERMITS
✓ BRICK LAYERS ✓ SHUTTERING CARPENTERS
✓ SHUTTERING JOINERS ✓ STEEL FIXERS
✓ ELECTRICIANS ✓ PLUMBERS
✓ STEEL ELECTORS FOR STRUCTURES
CIMS COLLEGE 0777-068-777

VILLAGE HOTEL JAFFNA EXPRESS
யாழ் - கொழும்பு பஸ் சேவை
AIRPORT PICK UP DROP SERVICE
அன்னை முத்துமாரி பஸ் சேவை இனி வரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில்...
கட்டணம் - 2800/= (16349)
T.P:077 544 8503

CANADA
VISITOR VISA
VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்
CIMS COLLEGE (C-7001)
0777-068-777
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் நுணாவில் பகுதியில் 18 பரப்புக் காணி விற்பனைக்குண்டு
நிலப்பரப்பு
- நுணாவில் மேற்கு சாவகச்சேரி வேறாக்கன்னி கந்தசாமி கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று சூழல்
- ஒரு பரப்பின் விலை பிரதான வீதியை முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் 14 இலட்சமும் 18 அடிப் பாதையை முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் 12 இலட்சம் வரையும் உள்ளது.
- பார்வையிடும் நேரம் காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை
தொடர்புகளுக்கு :-
ஜெயம் (16596)
077 814 7389
077 986 5457

## மரண அறிவித்தல்



தோற்றம் 28 . 06 . 1966 | மறைவு 02 . 08 . 2023

### நாகலிங்கம் சிறிசத்தியநேசன்

சிறுப்பிட்டி மேற்கு, நிர்வேலியைப் பிறப்பிடமாகவும் பத்தமேனி அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சிறிசத்தியநேசன் அவர்கள் நேற்று (02.08.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் மற்றும் நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் நாகராசா காலஞ்சென்ற பாக்கியம்(பூபதி) தம்பதியரின் அன்பு மருமகனும் இராசலலிதா அவர்களின் அன்புக் கணவரும் கஜதர்சன், நிதர்சன்(அமெரிக்கா), மதுர்சன், மதுசா, சர்மிளா ஆகியோரின் அன்புத் தந்தையும் மற்றும் சத்தியபாமா, சத்தியலிங்கம், சத்தியவரதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் யோகரத்தினம், மதிவதனி, கிருபாமதி, தர்மராசா, செல்வகுமார், இராசகுமாரி, சுரேஸ்குமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 03.08.2023 வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தீர்த்தாங்குளம் உல்லிவிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொ.இல : 074 078 3541 (16597)

தகவல்: குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிடெட் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org